

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 132பயனாளிகளுக்கு ரூ.79.16கோடி மதிப்பில் வீட்டுமனை பட்டா, கூட்டுறவு வங்கி கடன் உதவிகளை சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, ஒன்றிய குழு தலைவர்கள் லோ.ரவிச் சந்திரன், வேல்முருகன், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில் குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் சீதாராமன், முருகேசன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை

# முத்தமிழறிஞர் கலைஞரின் 7வது நினைவு நாள் அமைதிப் பேரணியில் தொ.மு.ச. பேரவை இணைப்புச் சங்கங்கள் திரளாகப் பங்கேற்பீர்!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!



சென்னை, ஆக.6-

தொ.மு.ச.பேரவைப் பொதுச் செயலாளர் மு. சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஐந்து முறை முதலமைச்சராக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து அகில இந்தியாவையே தமிழ் நாட்டை திரும்பிப் பார்க்க வைத்தவர், எழுத்தாளராக, கவிஞராக, இலக்கியவாதியாக, தலை சிறந்த நிர்வாகியாக, தமிழகத்தில் கடந்த 100 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் அதிக காலம் அரசியல் கட்சித் தலைவராகவும் தமிழகத்தை அதிக ஆண்டுகள் ஆண்ட பெருமைக்குரியவரும், ஏற்றுக் கொண்ட கொள்கைகளில் சமரசம் செய்து கொள்ளாமல் மானமுள்ள சுய மரியாதைக்காரராக வாழ்ந்தவரும், இனமானம் - தன்மானம் - சுயமரியாதை மொழியுணர்வுகளை தமிழக மக்களின் உள்ளங்களிலும், உணர்வுகளிலும் நிலை நிறுத்திய வரும், வெற்றியையும், தோல்வியையும் சமமாகக் கருதி, தன் ஆளுமையை நிரூபித்தவரும், நவீன தமிழ் நாட்டின் சிற்பியுமான கடைகோடித் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவராக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவுநாளையொட்டி கழகத் தலைவரும், தமிழ் நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நாளை (ஆகஸ்ட் 7) காலை 7 மணி அளவில் சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் இருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள், மாவட்ட கவுன்சில் செயலாளர்கள், பேரவை செயற்குழு உறுப்பினர்கள், தொ.மு.ச. பேரவையில் இணைந்துள்ள இணைப்புச் சங்கங்களின் நிர்வாகிகள், போக்குவரத்துத் தொழிலாளர்கள் அனைவரும் திரளாகப் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவினைப் போற்றி அஞ்சலி செலுத்திட வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறுகிறது !

திருவண்ணாமலை, ஆக.6-

திருவண்ணாமலைதெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெறுகிறது. அமைதி ஊர்வலத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையேற்று, தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

தந்தை பெரியார் எண்ணங்களை செயல்படுத்திய செயல் வீரர், பேரறிஞர் அண்ணாவின் இதயத்தை இரவலாக பெற்று ஏழையின் சிரிப்பில் இறைவனை கண்டவர், தமிழன்னைக்கு செம்மொழி மகுடம் சூட்டிய தவப்புதல்வர், திராவிட இனத்தின் எழுச்சி தலைவர், நவீன தமிழகத்தின் சிற்பி, உலக தமிழினத்தின் விடி வெள்ளி, எளிய மக்களின் நல்வாழ்வுகாக தன் வாழ்நாள் எல்லாம் இறுதி வரை களமாடிய இணையற்ற களப் போராளி, உடன் பிறப்பே எனும் ஒற்றை சொல்லால் இலட்சிய படையினை கட்டியெழுப்பிய திராவிடத் தலைவர். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெறவுள்ளது.

நாளை (07.08.2025- வியாழக்கிழமை காலை சரியாக 8 மணிக்கு, காந்தி சிலை அருகில் இருந்து அமைதி ஊர்வலம் நடைபெறவுள்ளது. அமைதி ஊர்வலத்திற்கு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையேற்று, தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன், கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தெற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ஆர். ராஜசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ். அம்பேத்குமார், ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அமைதி ஊர்வலத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொன். முத்து, ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, ஆர்.வேல் முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாய தொழிலாளர்அணிதுணைசெயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டு ரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், விஜய லட்சுமிரமேஷ், ஜெயராணி ரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், கோ.எதிரொலி மணியன்,

மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், துணைத் தலைவர் பாரதிராமஜெயம், தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு. கணேஷ், விஜி(எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா. கார்த்திகேயன், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளி கிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா,

வடக்கு மாவட்டம். எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், மா.ஏழுமலை, என். கே.ஏ.பாபு, இ.எஸ்.டி.கார்த்திகேயன், கே.ஏ.புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி. அசோக், பி.எஸ்.சாந்தகுமார், ப.மணிகண்டன், அன்னை.சீனுவாசன், பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல் பாஷா, ப.க.மணிவண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், மாலினி வினோத் திவாகரன், இராணிவேங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர். சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி. மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ். மோகன், து.மாமது, ஏ. ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிட முருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர். பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன், தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக் குழு உறுப்பினர்கள்

ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம். காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர். வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத் பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம். சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், கே.கோவர்தணன், வேணிஏழுமலை, டி.கே. மோகன், திருவண்ணாமலை மாநகர பகுதி கழக செயலாளர்கள் சு.விஜி(எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.எஸ்.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொள்கிறார்கள்.

# அரசியலார்க்கு நீர் அறிவாலயம்!



தமிழ் பேசி, தமிழ் எழுதி,
தமிழுக்கு உழைத்து,
தமிழாய் வாழ்ந்தவரே,
நீர் இல்லாத நிலை
ஒன்றிய அரசால் தமிழுக்கு
நிதிஇல்லை,
தமிழன் முன்னேற நிதி இல்லை,
தமிழகம் முன்னேற
திட்டங்கள் இல்லை;

தமிழனின் வியர்வை
GST பெயரால் இல்லாத மொழிக்கும்,
பொல்லாத
அரசியலுக்கும், சொல்லாமல்
செல்கிறது, தமிழகம்
நிதி இல்லாமல் தவிக்கிறது;

முன்னை பிறந்த அன்னைத் தமிழின்
செம்மை மகனே எம் தலைவா,
நம் தொன்மை பறைசாற்றி
செம்மொழி நிலையில் தமிழை வைத்தவரே;

தமிழ் மண் கீழடி சொல்லும்,
தமிழன் தொன்மை,
சிலர் மறுத்தாலும், மறைத்தாலும்,
வெல்லும் எங்கள்
வரலாற்று உண்மை;
உம் மொழிக் கொள்கை
மற்றவரும் ஏற்றதால்,
வாயடைத்து நிற்கின்றார்
உம்மை வசை பாடியவர்;

மாற்று மொழி திணித்து, தமிழை
தோற்றுபோகச் செய்கிறார்,
சிலர் அவரோடு கை கோர்த்து
மாநில உரிமை வீழ்த்துகிறார்;

தமிழனுக்கு உணர்வூட்டி
உரிமை காத்த உதய சூரியனே,
உம் சுயமரியாதை குரல் கேட்டு,
எழுந்தோம் நாங்கள்,
இதயமில்லாதவர்
உறங்கட்டும் இன்னும்

கவிஞர்களுக்கு நீர் தான் தலைப்பு,
தொண்டர்களுக்கு நீர் சரணாலயம்,
அரசியலார்க்கு நீர் அறிவாலயம்,
தமிழுக்கு நீர் நடைபயணம்,
உம் விடைப் பயணம்.



எம். ஜாகீர் உசேன்

### மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை - முத்தமிழ் அறிஞர்

# கலைஞர் நினைவு தினத்தை முன்னிட்டு மாபெரும் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி கழகத்தினருக்கு வேண்டுகோள்!



மதுரை, ஆக.6-

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை 7ஆம் தேதி வண்டியூர் ரிங் ரோடு அருகிலிருந்து அமைதி பேரணியாக சென்று டோல்கேட் அருகே மஸ்தான்பட்டியில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர்-அமைச்சர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ள நிலையில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டுகோள் விடுத்துள்ளார், அதன்விபரம்: தமிழே உயிராக, தமிழர் வாழ்வே மூச்சாக, தமிழ்நாட்டின் உயர்வேவாழ்வாகக் கொண்டு வாழ்ந்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கலைஞரின் நினைவை போற்றி கழகத்தின் வெற்றிக்கு உறுதியேற்போம் என நாளை 7ஆம் தேதி அமைதிப் பேரணியாக சென்று முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு தினத்தை நினைவு கூர வேண்டும் என கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். அவர்களின் ஆணைக்கிணங்க மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை ஏழாம் தேதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வடக்கு மாவட்ட அவை தலைவர் எம்.ஆர். எம். பாலசுப்பிரமணியம் தலைமையில் மதுரை வண்டியூர் ரிங் ரோடு பகுதியிலிருந்து மாபெரும் அமைதிப் பேரணி தொடங்கி டோல் கேட் அருகே மஸ்தான்பட்டியில் அமைந்துள்ள தலைவர் கலைஞரின் திருவுருவ சிலை முன்பாக பேரணி முடிவுற்று, அங்கு அன்னாரது வெங்கல சிலைக்கு வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்திமாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்

இந்த மாபெரும் அமைதிப் பேரணி மற்றும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் வடக்கு மாவட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளாக அனைவரும் பங்கேற்று அமைதிப் பேரணியை சிறப்பு செய்து முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவை போற்றிட வேண்டுமென மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி கணியம்பாடி தெற்கு மற்றும் பெண்ணாத்தூர் பேரூராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம் காட்டுப்புத்தூரில்நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முகாமை பார்வையிட்டு மக்களின் குறையை நேரில் கேட்டு அறிந்தார். உடன் கணியம்பாடி தெற்கு ஒன்றிய செயலாளர் ஒன்றிய குழு துணை தலைவர் என்.கஜேந்திரன்,பெண்ணாத்தூர் பேரூராட்சி செயலாளர் அருள்நாதன் மற்றும் காட்டுப்புத்தூர் தலைவர் கோபி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.